


தமிழ்நாடு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்குத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவரும் தலைமை நிலைய செயலாளருமான பூச்சி எஸ். முருகன் ஆகியோர் நேற்று முன்தினம் (10.05.2025) சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் கே.தீனதயாளன்– ராஜலட்சுமி தம்பதியரின் மகள் தீ.லாவண்யா – ரா.அருண் கிஷோர் திருமண வரவேற்பில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். சங்க நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் உடன் இருந்தனர்.



”நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு! கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் கோவை மாநகர் மாவட்டம், வடக்கு சட்டமன்றத் தொகுதி, வேலாண்டிபாளையம் பகுதி செயலாளர் எ.எம்.கிருஷ்ணராஜ்6 தலைமையில் வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர் எம்.கே.பிரவீன்ராஜ், சிவக்குமார், நா.பொன்ராஜ், பகுதி அவைத் தலைவர் மைதிலி ஆ.நடராஜ், துணைச் செயலாளர்கள் எம். ராஜேந்திரன், ஆர்.சுந்தர்ராஜ், கே.லதா மகேஸ்வரி, பொருளாளர் எல்.நாகராஜ், பிரதிநிதிகள் என்.கிருஷ்ணன்,தே.மகேஸ்வரன், ப.ரமேஷ், விவசாய தொழிலாளர் அணி தலைவர் சிவராமன், அயலக அணி அமைப்பாளர் தி.கண்ணன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர். சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், தலைமைக் கழகப் பேச்சாளர்:அந்தியூர் சுப்பு (எ) சா.சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆனந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் சங்கனூர் ஆனந்தகுமார், சரஸ்வதி புஷ்பராஜ், பகுதிக் கழகச் செயலாளர்கள் சாயிபாபா பகுதி செயலாளர் கே.எம்.ரவி, மாநகராட்சி மேற்கு மண்டலத் தலைவர் தெய்வயானை, நெசவாளர் அணி அமைப்பாளர் வி.மணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### சிலந்தி கட்டுரைகள்!

# ம.தி.மு.க…“சங்கொலி”யின் மதிப்பீடு!

நம் நினைவில் வாழும் முரசொலி செல்வம் அவர்களின் பிறந்தநாளில் முரசொலியில் ‘சிலந்தி’ என்ற பெயரால் அவர் எழுதிய 151 கட்டுரைகளை தொகுத்து, தி.மு.க. இளைஞர் அணி, முத்தமிழறிஞர் பதிப்பக வெளியீடாக எழில் கொஞ்சும் நூலை வரலாற்று ஆவணமாக வெளியிட்டுள்ளது.

நூலின் உள்ளே, நுழை வாயிலில் இடம்பெற்றுள்ள புன்முறுவல் பூத்த முரசொலி செல்வம் அவர்களின் கம்பீரமான புகைப்படம், அவரை நேரில் பார்க்கும் உணர்வை நமக்கு அளிக்கிறது.

“‘சிலந்தி’ என்ற பெயரால் அவர் எழுதிய கட்டுரைகள் அன்று முதல் இன்று வரை நமக்கு மட்டுமல்ல, அரசியல் ஆர்வலர்கள் அனைவருக்கும் பாடமாக அமைந்தது. பொதுவாக சிலந்தி வலையைத் தொட்டால் அறுத்துவிடலாம்

**ஆனால் செல்வம் அண்ணனின் வாதங்கள் நைலான் நரம்பு வலை போலத்தான் இருக்கும்; யாராலும் மறுத்து அறுத்துவிட முடியாது. அந்த அளவிற்கு வலிமையான வாதங்களை வன்மையான எழுத்துக்களால் வைத்து வந்தார்.**

**அவர் எழுதிய இக்கட்டுரைகள் அவரைப் போலவே கம்பீரமானவை!**

**ஆறு ஆண்டுகால அரசியல் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் பல்லாண்டு கால அரசியல் இதனுள் இருக்கிறது. சரியானதை அடையாளம் காட்டுகிறார். தவறானவர்களை அம்பலப் படுத்துகிறார்.**

கதை சொல்லும் பாணியில் எழுதி இருப்பதால் இவை படிக்கச் சுவையாகவும் இருக்கின்றன.

அவரதுஎழுத்துக்கள் எப்போதும் சூடானவை அதே நேரத்தில் சுவையானவை. அன்றாட அரசியலைத் தான் விமர்சிப்பார். அதே நேரத்தில் கடந்தகால அரசியலை நினைவூட்டுகிறார். குத்தல் இருக்கும். அதே நேரத்தில் யார் மனதையும் இரணப்படுத்தாது. எல்லோரும் அறிந்து கொள்ள அவரது கட்டுரைகளில் ஏராளமான தகவல்கள் நிறைந்து கிடக்கும்” என்ற தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு அரசின் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அருமையான அணிந்துரை, கரம் பிடித்து நூலின் உள்ளே வாசகர்களை அழைத்துச் செல்கின்றது. அணிந்துரையை அடுத்து, ‘முரசொலி செல்வம் வாழ்க்கைத்தடம்’ என்ற ஏழு பக்கங்கள் கொண்ட கட்டுரை, முரசொலி செல்வம் அவர்களின் வரலாறு, எழுத்தாற்றல், அடக்குமுறையை எதிர்கொண்ட அவருடைய துணிச்சல் ஆகியவைகளை படம் பிடித்துக் காட்டுகிறது.

முரசொலியில் 2019 ஆம் ஆண்டில் எழுதிய 32 கட்டுரைகள், 2020 ஆம் ஆண்டில் எழுதிய 17 கட்டுரைகள், 2021 ஆம் ஆண்டில் எழுதிய 13 கட்டுரைகள், 2022 ஆம் ஆண்டில் எழுதிய 36 கட்டுரைகள், 2023 ஆம் ஆண்டில் எழுதிய 27 கட்டுரைகள், 2024 ஆம் ஆண்டில் எழுதிய 25 கட்டுரைகள் ஆகியவைகள் தொகுக்கப்பட்டு, காலப்பெட்டகமாக, கருத்துக் கருவூலமாக இந்நூல் மின்னி மிளிர்கிறது! ஒவ்வொரு கட்டுரையிலும் இடம்பெற்றுள்ள புகைப்படங்கள் நம்மை கடந்த காலத்திற்கு அழைத்துச் செல்கின்றன. வரலாற்று நிகழ்வுகள் திரைப் படக் காட்சிகளாய், நம் நெஞ்சில் மலர்ந்து மணம் வீசுகின்றன!

“முடியட்டும் மதவெறி! விடியட்டும் நல்லிணக்கம்! ‘புனைச் செய்திகளை பொடிப் பொடியாக்குவோம்!’ ‘நாணலாய் வளைகிறீர்களா? நாணயத்துக்கு வளைகிறீர்களா?’

‘காலத்தை வென்றவன் நீயே!’

‘கொக்கென்று நினைத்தாரோ தமிழக ஆளுநர் ரவி!’ ‘ரொட்டி இல்லையா? கேக் சாப்பிடுங்கள்!’ ‘ஊசி



யில் ஒட்டை என்று சல்லடை கேலி பேசுவதா?’

தென்றல் அல்ல நாங்கள்; புயல் என அறிவீர்! சாதிய, சதிகார அரசியலுக்கு சம்மட்டி அடி தாரீர்!” என நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் ஒவ்வொரு தலைப்புமே நம்மை சுண்டி இழுக்கின்றன; படிக்கத் தூண்டுகின்றன!

**திருவாரூர் புலிவலத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தின் சிறப்பில் தொடங்கி, துணை முதல்வரின் தி.மு.க. சின்னம் தொடர்பாக, அரசு விழாவில் காவி உடையில் வலம் வரும் உ.பி. முதல்வர்; அ.தி.மு.க. கரைவேட்டியுடன் கலந்து கொண்ட எம்.ஜி.ஆர்., எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர்களை அம்பலப்படுத்தும் சிலந்தியின் பதில் என நூலின் ஒவ்வொரு பக்கமும் கருத்து வளம் நிரம்பியவை.**

நூல் வெளிவர துணை நின்றோர் அனைவரையும் ‘சங்கொலி’ பாராட்டி வாழ்த்துகிறது! வரலாற்று ஆவணமாய்த் திகழும் சிலந்தி கட்டுரைகளை தமிழ் மக்கள் வாங்கிப் படித்து பரப்பிட முன்வர வேண்டும் என்று ‘சங்கொலி’ விழைகிறது!

**ஆ.வந்தியத்தேவன்**

–நன்றி ‘சங்கொலி’

9.5.2025

### முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும்

# 5,650 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/-

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மே 12 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.5.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஹஜ் மானியமாக 5,650 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/ வீதம் மானியத் தொகை வழங்கிடும் அடையாளமாக, 10 பயனாளிகளுக்கு ஹஜ் மானியத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.**

2024-25ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, முதல் முறையாக ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்த ஹஜ் பயணிகள் ஒவ்வொருவருக்கும் ஹஜ் மானியத் தொகை இந்த ஆண்டு முதல் 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப் பட்டது.

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு தமிழ்நாடு அரசால், 14 கோடியே 12 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தகுதியுள்ள பயணி ஒருவருக்கு ரூ.25,000/ வீதம் 5,650 பயனாளிகளுக்கு இம் மானியத் தொகை வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக, 10 பயனாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று தலா ரூ.25,000/க்கான காசோலைகளை ஹஜ் மானியத் தொகையாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ப.அப்துல் சமது, பிற்படுத்தப் பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர். சா.விஜயராஜ் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. சட்டத்துறை சார்பாக ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்ட ஆலோசனைக்கூட்டம்!

## மூத்த வழக்கறிஞர் மாநில சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை!

*தருமபுரி , மே 12 -*

தி,மு,க, சட்டத்துறை சார்பாக தருமபுரி கிழக்கு மற்றும் தருமபுரி மேற்கு மாவட்ட ஆலோசனை கூட்டம் டி.என்.ஜி.மஹாலில் கழக மூத்த வழக்கறிஞர் மாநில சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி மற்றும் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி பழனியப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் வரவிருக்கும் 2026 சட்டமன்ற தேர்தலின் ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.இந்த நிகழ்வில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி, நகர செயலாளர் நாட்டான்.மாது,மாநில சட்ட திருத்தக்குழு இணை செயலாளர் இரா.தாமரைச் செல்வன்,தருமபுரி கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சிவன்,தருமபுரி மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் டி.சந்திரசேகர், மற்றும் தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக மாநில,மாவட்ட, ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ,வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மாவட்டத்தில் பள்ளி வாகனங்கள் ஆய்வு!

# சரியாகப் பராமரிக்கப்படாத வாகனங்கள் - ஓட்டுநர்களுக்கு அபராதம்!

## மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் வாகன ஆய்வாளர்களுக்கு அறிவுரை!

*தருமபுரி, மே 12 -*

*தருமபுரி மாவட்டம், தருமபுரி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பாலக்கோடு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் சார்பில் நடைபெற்ற பள்ளி வாகனங்கள் ஆய்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு,*

*பள்ளி வாகனங்களை சரிவர பராமரிக்கப்படாத 2 பள்ளி வாகனங்களுக்கு ரூ.1000/- அபராதமும், ஓட்டுநர் உரிமம் இல்லாத மற்றும் அவசர கல வழிகளை சரிவர பராமரிக்காத பள்ளி வாகன ஒட்டுநனருக்கு ரூ.5000/- வரை அபராதமும், முதலுதவி பெட்டிகளில் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்திய 10 பள்ளி வாகனங்களுக்கு ரூ. 100/- அபராதமும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் விதிக்கப்பட் டது.*

*மேலும், பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி, பள்ளி வாகனங்களில் அரசின் அனைத்து விதிமுறைகளும் முழுமையாக பின்பற்ற ப் பட்டுள்ளதா என்பதை உரிய முறையில் ஆய்வு செய்திட வேண்டும் என வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.*

*தருமபுரி மாவட்டம், தருமபுரி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பாலக்கோடு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் சார்பில் நடைபெற்ற பள்ளி வாகனங்கள் ஆய்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் நேற்று (10.05.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி, பள்ளி வாகனங்களில் அரசின் அனைத்து விதிமுறைகளும் முழுமையாக பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை உரிய முறையில் ஆய்வு செய்திட வேண்டும் என வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.*

*இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர்ரெ.சதீஸ்,இஆப., அவர்கள் தெரிவித்ததாவது:-*

*முதலமைச்சர் அவர்கள், மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். மேலும், முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், பள்ளி வாகனங்களில் மாணவ, மாணவிகளின் பாதுகாப்பிற்காக விதிமுறைகளை வகுத்து, பல்வேறு அறிவுறுத்தல்களை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.*

*தமிழ்நாடு மோட்டார் வாகன சிறப்பு விதிகள் 2012, விதி 11- ன்படி ஒவ்வொரு வருடமும் பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்ய மாவட்ட அளவிலான குழு (DISTRICT LEVEL - INTER DEPARTMENTAL COMMITTEE) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவர் வருவாய் கோட்ட அலுவலர் ஆவார். உறுப்பினர்க ளாக 1. வட்டாரப் போக்குவரத்து அலுவலர் 2. துணை காவல் கண்காணிப்பாளர் 3. முதன்மை கல்வி அலுவலர்/ மாவட்ட கல்வி அலுவலர் 4. மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை -1 ஆகியோர் உள்ளனர். இக்குழுவினர் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி வாகனங்கள் அனைத்தையும் பொதுவான ஓர் இடத்தில் வாகனங்களின் தகுதி குறித்து கூட்டு ஆய்வு மேற்கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளது.*

*2025 - 2026 ஆம் ஆண்டிற்கான, தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பாலக்கோடு பகுதி அலுவலகங்களை சார்ந்த மொத்தம் 104 தனியார் பள்ளிகளில் இயங்கக்கூடிய 751 பள்ளி வாகனங்களுக்கான சிறப்பு ஆய்வு முகாம் இன்று தருமபுரி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.*

*இதன்படி, இந்த ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பாலக்கோடு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் சார்பில் தருமபுரி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் பள்ளி வாகனங்களில் இருக்கை வசதிகள், வாகனத்தின் காப்பீடு காலம், தீயணைப்பு கருவி, முதலுதவி கருவிகள், வேகக்கட்டுபாட்டு கருவி, வாகனத்தின் முன்புறம், பின்புறம் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்கள், அவசர கால கதவுகள் மற்றும் ஜன்னல்கள், பேருந்தின் தளம், பள்ளி குழந்தைகளுக்கான இருக்கை வசதிகள், பள்ளி குழந்தைகள் புத்தகப்பை வைக்கும் பகுதி உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*பள்ளி வாகனங்களை எப்.சி. பரிசோதனைக்காக கொண்டு வரும்போது வாகனத்தில் இருந்த பாதுகாப்பு அம்சங்களின் செயல்பாடுகளை அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். குறைந்தது 3 மாதங்களுக்கு ஒருமுறை அவசர கால கதவுகள் உள்ளிட்ட பாதுகாப்பு அம்சங்களின் செயல்பாடுகளை பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். அதேபோல், அவசர கால கதவுகள் திறக்கும் முறைகள் மற்றும் தீத்தடுப்பு சாதன ங்களை செயல்படுத்தும் முறைகளை ஓட்டுநர்கள் அறிந்து கொள்வதுடன், வாகனத்தில் உடன் வரும் பணியாளர்களும் அந்த செயல்பாட்டு முறைகளை தெரிந்துகொள்ளச் செய்ய வேண்டும்.*

*மேலும், ஆய்விற்கு வராத பள்ளி வாகனங்கள் பொதுச்சாலையில் இயக்குவது கண்டறியப்பட்டால் வாகனம் இயக்க விடாமல் தடைசெய்வதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கப் படும். மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி வாகனங்களையும் இம்மாத இறுதிக்குள் மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் தெரிவித்தார்.*

*இந்த ஆய்வில் 72 பள்ளிகளின் 352 பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் குறைபாடுகளுடைய 11 வாகனங்களுக்கு தகுதிச் சான்று ரத்து செய்யப்பட்டது. மேலும், சிறு குறைபாடுகளுடைய 14 வாகனங்கள் கண்டறியப்பட்டு, அவ்வாகனங்களின் குறைகளை நிவர்த்தி செய்து ஒரு வார காலத்திற்குள் மீண்டும் ஆய்விற்கு உட்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.*

*இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ். மகேஸ்வரன், தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் சி.க.ஜெய தேவ் ராஜ், தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி. இரா.காயத்ரி, மோட்டார் வாகன ஆய்வாளர்கள் அ.க. தரணீதர், ஆர்.பால சுப்பிரமணியம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வி.எஸ். லட்சுமணன்

**மே 12 (2009)**



**இளமைப் பருவம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**திண்டுக்கல் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து 18 ஆண்டுகளும் – திண்டுக்கல் மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**சிறுமலை ஊராட்சி மன்றத் தலைவராகவும், திண்டுக்கல் கூட்டுறவு நிலவள வங்கி தலைவராகவும், மாநில கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநராகவும் பதவி வகித்தவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசாவில் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**